This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# ஒரு கல்யாண ஏற்பாடு

www.writersujatha.com

## 1

நடு ராத்திரி சுரேஷ் போன் பண்ணினான். ராம நாராயணனுக்கு அந்த வேளையில் அமெரிக்காவிலிருந்துதான் கால் வரும் என்று தெரியும். ராங் நம்பர் பகல் வேளைகளில்தான் வரும். எடுத்ததும் சர்வதேச 'பீப்' ஒன்று கேட்கச் சற்று நேரம் அலையோசைக்குபின் "ஹலோ!"

"அப்பா? ஹௌ ஆர் யூ? ஹௌ ஈஸ் அம்மா? சுரேஷ் ஹியர்."

"நாங்க சௌக்கியமா இருக்கோம் சுரேஷ். இதோ அம்மாகிட்ட பேசு." போனைக் கஸ்தூரியிடம் கொடுத்தார். கஸ்தூரி எதற்காகவோ கண்ணாடி மாட்டிக் கொண்டாள்.

"அம்மா எப்படியிருக்கே? இந்த கிறிஸ்துமஸ் ஹாலிடேஸின்போது வர்றேன். ஓகே? ஒரு மாதிரி சிம்பிளா மேரேஜ் செட்டில் பண்ணிடு. ஓகே! ஜாஸ்தி பெண் பார்க்க வேண்டாம். நீயே ஒண்ணு ரெண்டு பார்த்து செலக்ட் பண்ணி வை. ஓகே? போட்டோ அனுப்பி வைச்சா நான் பார்த்து ஓகே சொல்லிடறேன். ஓகே? லெட் மி ஜஸ்ட் டாக் டு ஹர்...யு நோ ஃபார் எ வைல். மாம், நீ பார்த்து ஓகே சொன்னால் போதும் ஓகே?"

"தை மாதம் பிறக்கிற வரைக்கும் இருந்தால் முதல் முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை முடிச்சுடலாண்டா சுரேஷ்."

"தை...தட் மீன்ஸ் மிட் ஜன்யுவாழி, ஒதட்ஸ் இம்பாஸிபிள் நோ வே! லெம்மி ஜஸ்ட் டாக்டு மாக்ஸ் மா லெம் மி ட்ரை...ஐ மைட் ஜஸ்ட் பி ஏபிள் டுமேக்கிட் கம் பைனிங் எ டோக்கியோ விஸிட்...டோன் ப்ழாமிஸ். ஒக்கே பை?"

"என்ன சொன்னான்?" என்றார் ராமநாராயணன், அவள் போனை வைத்ததும்,

"என்னவோ இழுத்து இழுத்துப் பேசினான். பாதி புரியலை."

"கல்யாணம் பண்ணிக்கிறானாமா?"

"ஆமாம். பெண் பார்த்துடுன்னான். கிறிஸ்த்மஸுக்கு வர்றானாம். நீங்க பேசக் கூடாதோ?"

"அதுக்குள்ளே போனை வெச்சுட்டானே! தூக்கத்தைக் கெடுத்தான்!" ராமநாராயணன் படுக்கையில் போய்ப் படுத்து விட்டத்தை இருட்டில் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவருக்கு ப்ராஸ்டேட் உபத்திரவம் உண்டு. சிறுநீர் கழிக்க வேண்டும் போல இருக்கும். போனால் வராது, இம்சை. ராமநாராயணன் ஜியலாஜிகல் சர்வேயில் சீனியர் ஜியலாஜிஸ்டாக ஓய்வு பெற்றவர். டைரக்டர் பதவி கிடைக்கவில்லை. பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி கோவாவில் இருக்கிறாள், மாப்பிள்ளை மெட்டலர்ஜிஸ்ட். மூத்தவன் சுரேஷ் பெங்களூர் யுவிஸிஇயில் படித்து அமெரிக்கா போய் மிஸ்ஸோரி ரோலாவில் எம்.எஸ்.படிப்பு முடித்து அங்கேயே வேலை

www.writersujatha.com